17.11.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகேஷ்குமார் | சாதி | |
| த/பெ | கணேசன் | மதம் | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 38/2022 |
| மாவட்டம் | | தேதி | |

( 17.11.2022 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரம் போக்குவரத்து காவல்துறையில் காவலராக பணிசெய்கிறேன். கடந்த 6.5.2012ல் இருந்து விழுப்புரம் ரயில்வே காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றினேன். கடந்த 2014ல் 3ம் எதிர் வாசுதேவன் என்பவர் எங்கள் காவல்நிலையத்தில் ஆய்வாளராக இருந்தார். என்னையும் பத்மநாபன் என்பவரையும் கிரைம் டியூட்டி செய்ய பணித்திருந்தார். 5.5.2014ந் தேதி பத்மநாபன் அன்று சிறுவிடுப்பில் சென்றுவிட்டார். அதனால் நான் மட்டும் கிரைம் டியூட்டி பணி செய்துவிட்டு 6.5.2014ந்தேதி காலை 6.00மணிக்கு அந்த பணி முடித்தேன். அந்த நேரத்தில் காவல் ஆய்வாளர் வாசுதேவன் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சேகர், மற்றும் அசோகன், நிலைய எழுத்தர் புருஷோத்தமன் ஆகியோர் திருச்சியில் நடந்த காவல் துணை கண்காணிப்பாளரின் மீட்டிங்கில் கலந்து கொள்ள புறப்பட்டு சென்றார்கள். நான் வீட்டிற்கு சென்றுவிட்டு, எனது செல்போனை சவிட்ச் ஆப் செய்துவிட்டு படுத்துவிட்டேன். காலை

9.30மணியளவில் நான் எனது செல்போனை ஆன்செய்தபோது அதில் பாலமுருகன் ஏட்டு ஐயா(2வது எதிரி) அவர்களின் 2 மிஸ்டுகால் மற்றும் அலர்ட் மெசெஜ் இருந்தது. நான் உடனே அவரை கால் செய்து பேசவில்லை. மதியம் 1.30மணியளவில் காவலர் திருக்குமரன்(1வது எதிரி) எனக்கு போன் செய்து ஜெயவேல் என்பவர் ஒருவரது பர்சை திருடி மாட்டிக்கொண்டார் என்றும், ஸ்டேசனில் தான் இருப்பதாகவும், வாருங்கள் அவனை விசாரிக்க வேண்டும் என்றும், சொல்லி என்னை அழைத்தார்கள். எனது குழந்தைக்கு ஊசி போட வேண்டும் என்று அது மட்டுமல்லாமல் இன்று இரவும் டியூட்டி செய்யவேண்டும் என்றும், அதனால், வரவில்லை என்று சொல்லிவிட்டார். 6.5.2014ந்தேதி மாலை 5.00மணியவில் நான் விழுப்புரம் ரயில்வே காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் பின்பக்கத்தில் இருந்த லாக்கப்பில் துரை என்பவரை லிடிங்செயின் போட்டு கட்டிப்போட்டிருந்தார்கள். பக்கத்தில் இருந்த லாக்கப்பில் ஜெயவேல் என்பவரை லீடிங்செயின் போட்டு கட்டிப்போட்டிருந்தார்கள். பாரா டியூட்டில் காவலர் ஸ்ரீநாத்(5வது எதிரி) இருந்தார். காவல்நிலையத்தின் பின்புறத்தில் அசாரியா என்பவர் பெஞ்சில் இருந்தார். நான் அசாரியா என்பவரியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அன்றைய தினம் காலையில் பிளாட்பார்மில் நடந்துகொண்டிருந்தபோது லாக்கப்பில் கட்டிப்போடப்பட்டுள்ள ஜெயவேல் என்பவர் தன்னை அடித்து தன்னிடம் இருந்த பர்ஸ் மற்றும் செல்போனை பிடிங்கிபோனதாக சொன்னார். ரயில்வே போலீஸ் ஸ்டேசனுக்கு புகார் கொடுக்க முதலில் வந்ததாகவும், அங்கு ஒரு காவலர் மட்டும் இருந்ததால், புகார் கொடுக்காமல் சென்றதாக சொன்னார். பின்னர் விழுப்புரம் நகர காவல் நிலையதிற்கு புகார் கொடுக்க அவர் சென்றதாகவும், சம்பவம் நடந்த இடம் விழுப்புரம் ரயில்வே காவல்நிலைய எல்லை என்பதால் அங்கு போயி ,புகார் கொடுங்கள் என்று சொல்லி அவர்கள் திரும்ப அனுப்பியதாகவும் சொன்னார். மீண்டும் அசாரியா விழுப்புரம் ரயில்வே

காவல்நிலையம் வந்த போது பாலமுருகன் ஏட்டு ஐயா(2வது எதிரி) இருந்தார் என்றும் அவரிடம் நடந்த சம்பவம் சொன்னதாகவும், அவர் அசாரியாவை அழைத்துக்கொண்டு ரயில்வே பிளாட்பார்த்துக்கு வந்தார் என்றும், 2வது பிளாட்பார்ம் கடைசி பகுதிக்கு வந்த போது ஜெயவேலை அசாரியா அடையாளம் காட்டியதாகவும், பாலமுருகன் ஏட்டு ஐயா ஜெயவேலை காவல்நிலையம் அழைத்து வந்து லாக்கப்பில் கட்டிப்போட்டதாகவும் அசாரியா என்னிடம் சொன்னார். நான் லாக்கப் சென்று ஜெயவேலிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவன் தான் அடித்துப்பிடிங்கியது உண்மை என்றும், ஆனால் தன்னுடைய கவர் என்று நினைத்து அவ்வாறு செய்தேன் என்று சொன்னான். போன் எங்கே என்று கேட்டேன், தெரியவில்லை. புதுபோன் வேண்டுமானாலும் வாங்கிகொடுக்கிறேன் என்று சொன்னான். திருக்குமரன் என்ற காவலர் தன்னை கடுமையாக அடிக்கிறார் என்றும், அடி தாங்கமுடியவில்லை என்றும், என்னை காப்பாற்றுங்கள் என்று என்னிடம் ஜெயவேல் சொன்னான். திருடிய பொருள் எங்கே உள்ளது என்று சொல் என்றும், அவ்வாறு சொன்னால் உன்னை விட சொல்கிறேன் என்று நான் சொன்னேன். பொருள் தன்னிடம் இல்லை என்று சொன்னான். அன்று மாலை 5.45மணிக்கு குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் திருச்சியில் இருந்து வந்தது. ,இன்ஸ்பெக்டர் வாசுதேவன், நிலைய எழுத்தர் புருஷோத்தம் ஆகியோர் இருவரும் அந்த ரயிலில் இருந்த இறங்கி காவல் நிலையம் வந்தார். அப்போது காவல்நிலையத்தில் நானும் திருக்குமரனும் மற்றும் பாரா காவலர் ஸ்ரீநாத்தும் இருந்தோம். காவல் ஆய்வாளர் வாசுதேவன் அசாரியாவிடம் சென்று என்ன நடந்தது என்று கேட்டார். பின்னர் லாக்கப்புக்கு வெளியே ஜெயவேலை அழைத்து காவல்நிலையத்தில் இருந்த பிளாஸ்டிக் பைப்பால் அவரது காலில் காவல் ஆய்வாளர் வாசுதேவன் 6 முறை அடித்தார். அப்போதும் ஜெயவேல் ஒப்புக்கொள்ளவில்லை. அசாரியாவுக்கு எழுத தெரியவில்லை என்று சொன்னார் அதனால், அந்த

நேரத்தில் காவல்நிலையம் முன்பாக சென்ற ஒரு பையனை அழைத்து அசாரியாவிடம் விபரம் கேட்டு புகார் எழுதிக்கொடுக்க இன்ஸ்பெக்டர் சொன்னார். 'அந்த பையன் மூலம் எழுதப்பட்ட புகாரில் அசாரியா கையொப்பம் போட்டார். அசாரியா தான் ஊருக்கு செல்ல தன்னிடம் காசு இல்லை என்று சொன்னான். இன்ஸ்பெக்டர் வாசுதேவன் அசாரியாவிற்கு பணம் கொடுத்தும் டிக்கெட் எடு்ததுக்கொடுத்தும் அனுப்பி வைத்தார். அப்போது இரவு 7.30மணி இருக்கும். அசாரியா ரயிலில் சென்றுவிட்டார். இரவு 8.00மணியளவில் இன்ஸ்பெக்டர் நிலைய எழுத்தர் புருஷோத்தமனிடம் எப்ஐஆர் போட்டு ஜெயவேலை மறுநாள் ரிமான்டுக்கு அனுப்ப வேண்டும் என்று அதனால், காலையில் சீக்கிரமாக வாருங்கள் என்று சொல்லி புருஷோத்தமனை அனுப்பி வைத்தார். புருஷோத்தமன் துரை என்பவரை சேர்த்து ரிமாண்டு செய்து விடலர்ம் என்று சொல்லிவிட்டு சென்றார். இரவு 9.00மணியளவில் லோகல் டிஎஸ்பி அங்கு ரோந்து வருவதாக பிளாட்பாரத்தில் இருந்த காவல் ஒருவர் தகவல் சொன்னார். நானும் திருக்குமரனும் இன்ஸ்பெக்டர் வாசுதேவனும் புறப்பட்டு பிளாட்பாரம் சென்றோம். திரும்பவும் நாங்கள் இரவு 10.00மணிக்கு ரயில்வே காவல்நிலையம் திரும்பினோம் அப்போது பாரதிதாசனும் என்ற காவலர் பார பணியில் இருந்தார். அவருக்கு இரவு 9.00மணி முதல் காலை 7.00மணி வரை பாரா பணி இருந்தது. ,இரவு 10.30மணியளவில் நானும் இன்ஸ்பெக்டரும் ஒட்டுநர் ஆன காவலர் திருக்குமரன் சாப்பிடுவதற்காக காவல்துறை சுமோ காரில் விழுப்புரம் புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ள ஒட்டலுக்கு வந்துவிட்டோம். சாப்பிட்டு விட்டு இரவு 11.00மணியளவில் காவல்நிலையம் திரும்பினோம். இன்ஸ்பெக்டர் வாசுதேவன் (3ம் எதிரி) தனக்கு அசதியாக இருப்பதாக சொல்லிவிட்டு காவல்நிலையத்தில் உள்ள அவரது அறைக்குள் சென்று படுத்துவிட்டார். இரவு 11.45மணியவில் காவலர் பத்மநாபன் காவல்நிலையத்திற்கு வந்தார். காவல்நிலையத்தில 'இருந்த கைதுகள்

ஜெயவேல் மற்றும் துரை அவர்களை பற்றி விசாரித்தார். பின்னர் காவல் நிலையத்தில் கடைசியில் உள்ள வெயிட்டிங் ரூம் சென்று படுத்துவிட்டார். இரவு 12.15மணி அதாவது 7.5.2014 தேதி 0.15மணி அளவில் உதவி ஆய்வாளர்கள் ஒய்வு எடுக்கும் அறையில் இருந்து துங்கி எழுந்து காவலர் திருக்குமரன் (1வது எதிரி) வந்தார், அவர் வரும்போதே கையில் 2 பிவிசி பைப்புகளை எடுத்து வந்தார். லாக்கபுக்கு வெளியே லீடிங்செயின் போட்டு கட்டப்பட்டிருந்த ஜெயவேனை கால்களை நீட்ட சொல்லி அவரது பாதங்களில் பிவிசி பைப்புகளை கொண்டு பலமுறை அடித்தார். பின்னர் ஜெயவேலின் 2 தோள்பட்டைகளிலும் பிவிசி பைப்புகளை கொண்டு திருக்குமரன் பலமுறை அடித்தார். 2 பிவிசி பைப்புகளை கொண்டு 1வது எதிரி காவலர் திருக்குமரன் ஜெயவேலின் தலையில் அடிக்க ஆரம்பித்தார். நானும் பாரா காவலர் பாரதிதாசனும் திருக்குமரனை ஏன் இப்படி தலையில் அடிக்கிறாய் என்று சத்தம்போட்டோம், அதற்கு 1வது எதிரி திருக்குமரன் ஏன் நான் விசாரிக்ககூடாதா என்று எங்களிடம் கேட்டார். பின்னார் மீண்டும் உதவி ஆய்வாளருக்குரிய ஒய்வு அறைக்கு சென்று படுத்துவிட்டார். நான் காவல்நிலையத்தில் பின்புறம் உள்ள பெஞ்சில் படுத்துவிட்டேன். அதிகாலை 3.00மணியளவில் 3வது எதிரி காவல்ஆய்வாளர் வாசுதேவன் எழுந்து வந்து கைதிகள் ஒழுங்ககாக இருக்கிறார்களா, நாங்கள் இருக்கிறோமா என்று பார்த்துவிட்டு மீண்டும் அவரது அறைக்குள் படுத்துவிட்டார். விடியற்காலை 4.30 மணியளவில் பிளாட்பார பணியில் இருந்த அமலநாதன் என்ற காவலர் மற்றும் பாரா பணியில் இருந்த பாரதிதாசன் ஆகியோரிடம் நான் குழந்தைக்கு உடல் சரியில்ல என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அன்று காலை 7.30மணியளவில் 1வது எதிரி காவலர் திரூக்குமரன் எனக்கு போன் செய்து இன்ஸ்பெக்டர் காவல்நிலையம் வர சொன்னதாக கூறினார். நான் குழந்தைக்கு ஊசி போட மருத்துவமனை வந்திருப்பதாக சொன்னேன். திரும்பவும் காலை 8.00மணியளவில் 1வது

எதிரி திருக்குமரன் 4,5 முறை என்னை செல்போனில் அழைத்தார். நான் முதலில் எடுக்கவில்லை. பின்னர் திருக்குமரனுக்கு நான் செல்போனில் அழைத்தபோது ஜெயவேல் பர்ஸ் திருடியதை ஒப்புக்கொண்டான் என்றும், லோகு என்பவரிடம் கொடுத்துள்ளதாக சொன்னான் என்றும், உடனே நீங்கள் வாருங்கள் என்றும் சொன்னார். தற்போது தான் குழந்தைக்கு ஊசி போட்டுவிட்டு வந்துகொண்டிருக்கிறேன் என்று திருக்குமரனிடம் சொன்னேன். காலை 9.00மணியளவில் மீண்டும் திருக்குமரன் என்னை செல்போனில் அழைத்தார். இன்ஸ்பெக்டரின் செல்போன் காவல்நிலையத்தில் உள்ளது என்றும், அதை எடுத்துக்கொண்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு உடனே வா என்று திருக்குமரன் சொன்னார். அதனால் நான் காலை 9.30மணிக்கு நான் ரயில்வே காவல்நிலையம் சென்றேன், அங்கு சித்ரா என்ற பெண் காவலர் பாரா பணியில் இருந்தார். காவல்நிலையத்தில 4வது எதிரி காவலர் ராஜீவ்காந்தி, நிலைய எழுத்தர் புருஷோத்தமன், சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் மற்றும் எஸ்பி ஏட்டு ரவி ஆகியோர் இருந்தார்கள். காவல்நிலையத்தில் பெஞ்ச் கலைந்து இருந்தது. காவல்நிலையத்தில் தண்ணீர் ஊற்றி கழுவி இருந்தார்கள் . நான் காவலர் சித்ராவிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். 2வது எதிரி ஏட்டு ஐயா பாலமுருகனும், 1வது எதிரி திருூக்குமரனும் ஜெயவேலை அடித்தார்கள் என்றும் ஜெயவேல் காவல்நிலையத்திலேயே மலம் போய்விட்டான் என்றும், எழுந்து நின்று லுங்கி கட்ட முடியவில்லை என்றும், சொன்னார். காசி என்ற ஸ்சிவிப்பர் அழைத்து கழிவி விட 3வது எதிரி இன்ஸ்பெக்டர் சொல்ல காசி கழிவி விட்டதாக காவலர் சித்ரா சொன்னார். இன்ஸ்பெக்டரின் ஜீப்பில் ஜெயவேலை 1வது எதிரி திருக்குமரன் , காவலர்கள் அன்பரசன் , ஸ்ரீநாத் மற்றும் 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன் ஆகியோர் அரசு மருூததுவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்கள் என்றும், காவலர் சித்ரா சொன்னார். நான் இன்ஸ்பெக்ரின் செல்போனை எடுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் முண்டியம்பாக்கம்

அரசு மருத்துவமனைக்கு காலை 9.45மணியளவில் சென்றேன் அங்கு இன்ஸ்பெக்டரின் சுமோ அங்கு இல்லை. தேடி பார்த்தேன் இன்ஸ்பெக்டர் உட்பட யாரும் இல்லை. 1வது எதிரி திருக்குமரனுக்கு நான் செல்போனில் தொடர்பு கொண்டு எங்கு இருக்கிறிர்கள் என்று கேட்டேன் அவர் முண்டியம்பாக்கம் அரசு மருுததுமனைக்கு எதிரே உள்ள ரயில்வே கூட்ஸ்யார்டில் இருப்பதாகவும் அழைத்தார்கள். நான் அங்கு சென்றேன். அங்கு 1வது எதிரி திருக்குமரன் 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன், காவலர் ஸ்ரீநாத், அன்பரசன் ஆகியோர் இருந்தார்கள். டாடா சுமோ காரில் ஜெயவேல் தூங்கியது போல் இருந்தார். நான் செல்போனை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தேன். நான் ஜெயவேல் எனக்கு ஏற்கனவே பழக்கமானவர் என்பதால், அவரிடம் பேசுவதற்காக சுமோவின் பின்பக்க கதவை திறக்கபோனேன் அப்போது 5வது எதிரி காவலர் ஸ்ரீநாத் கதவை திறக்க வேண்டாம் என்றும், ஜெயவேல் இறந்துவிட்டான் என்றும் சொன்னார். 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன் என்னை நீ கிளம்பி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போ என்றும் சொன்னார் நான் கிளம்பி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போயிவிட்டேன். 5வது எதிரி காவலர் ஸ்ரீநாத் எனக்கு அடிக்கடி போன் செய்து அங்கு இருக்கும் நிலைமையை குறித்து என்னிடம் கேட்டறிந்தார். ஜெயவேலை கொண்டுவரலாமா என்றும், கூட்டம் அதிகமாக உள்ளதா, எதாவது பிரச்சனை வருமா என்றேல்லாம் என்னை விசாரித்தார். நான் கூட்டம் இல்லை என்றும், பிரச்சனை இல்லை என்றும் தகவல் சொன்னேன். 2வது எதிரி பாலமுருகன் ஏட்டு ஐயா இருசக்கர வாகனத்தில் முண்டியம்பாக்கம் அரசு மருுததுவமனைக்கு காலை 11.30மணியளவில் வந்தார். இன்ஸ்பெக்டர் மற்றும் எல்லோரையும் எங்கே என்று கேட்டார். நான் அவர்கள் இருக்கும் இடத்தை சொன்னேன், அன்று பகல் 12.00மணிக்குமேல் டாடா சுமோ காரில் ம்ண்டியம்பாக்கம் அரசு மருந்த்துவமனைக்குள் வந்தார்கள். ஜெயவேலை ஸ்டெச்சரீல் வைத்து மருத்துவரியிடம் கொண்டுசென்றார்கள்.

மருத்துவர் ஜெயவேலை பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டார் என்று சொன்னார். உடனே 1 வது எதிரி சுமோவை எடுத்துவிட்டு சென்றுவிட்டார். 2வது எதிரி பாலமுருகன் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன் மட்டும் மருத்துவரிடம் ரொம்ப நேரமாக பேசிக்கொண்டிருந்தார். நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அன்று இரவு என்னை பணிக்கு அழைக்கவில்லை. மறுநாள் 8.5.2014 காலை சுமார் 10.00மணிக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு நான் செல்லவேண்டும் திருச்சி ஏடிஎஸ்பி சொன்னதாக காவல்நிலையத்தில் இருந்து எழுத்தர் புருஷோர்த்தமன் எனக்கு செல்போனில் காலை 8.00மணிக்கு தகவல் சொன்னார். காலை 10.00மணியளவில் நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை சென்றபோது அங்கு சவக்கிடங்கு அருகில் 1வது எதிரி திருக்குமரன், 2வது எதிரி பாலமுருகன், 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன், 5வது எதிரி ஸ்ரீநாத் ஆகியோர் இருந்தார்கள். திருச்சி ஏடிஎஸ்பி அங்கு இருந்தார். 1வது எதிரி திருக்குமரன், 2வது எதிரி பாலமுருகன், 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன், 5வது எதிரி ஸ்ரீநாத் ஆகியோரையும் என்னையும் தற்காலிக பணிநீககம் செய்து இருப்பதாக உத்தரவு நகல்களை கொடுத்தார். பின்னர் அந்த உத்தரவை பெற்ற நான் உடனடியாக வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு 9.5.2014 தேதி காலை 7.00மணிக்கு காவல்நிலையம் வரவேண்டும் என்று காவல்நிலைய எழுத்தர் புருஷோத்தமன் 8.5.2014இரவில் எனக்கு செல்போனில் தகவல் சொன்னார். 9.5.2014 தேதி காலை 7.00மணிக்கு காவல்நிலையம் நான் சென்றேன். காவல்நிலையத்தில் இன்ஸ்பெக்டர் மற்றும் நிறைய அதிகாரிகள் இருந்தார்கள். நீதிபதி விசாரிக்க வருவார் என்றும் எல்லோரும் ஒரே மாதீரியான பதில் அளித்தால்தான் தப்ப முடியும் என்று சொன்னார்கள். 3வது எதிரி இன்ஸ்பெக்டர் வாசுதேவன் என்னிடம் ஜெயவேல் தப்பி

ஓடியபோது பொதுமக்கள் 20,30பேர் பிடித்து அடித்தார்கள் என்று சொல்ல வேண்டும் என்று சொன்னார். சித்ரா என்பவர் தான் பாரா பணியில் இருந்தவர் என்பதால், அவர் இருந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால், சித்ரா 7.5.2014 தேதி காலை 7.00மணி முதல் 2.00மணி வரை பாரா பணியில் இருந்ததை காட்டும் சென்ட்ரிநோட்டு பக்கங்களை கிழித்து எடுத்துவிட்டு 5வது எதிரி ஸ்ரீநாத் பாராவில் இருந்ததாக சென்ட்ரிநோட்டு எழுதினார்கள். 4வது எதிரி ராஜீவ்காந்தி அந்த நோட்டை எழுதினார். 5வது எதிரி ஸ்ரீநாத் பாரா பணியில் இருந்ததாக கையொப்பம் செய்தார். பிஎஸ்ஆரில் ஜெயவேலின் கையெழுத்தை 4வது எதிரி ராஜீவ்காந்தி போட்டார். அன்று மாலையில் அவர்கள் சொல்லிகொடுத்தப்படியே நீதிபதி விசாரீத்தபோது நான் வாக்குமூலம் கொடுத்தேன். பிற்பாடு 2 நாட்கள் கழித்து காவலர் பாரதிதாசனிடம் என்ன நடந்தது என்று விசாரித்தேன் அவர் என்னிடம் 7.5.2014ந் தேதி காலை 6.00மணியளவில் ஜெயவேலை நிர்வாணமாக்கி 1வது எதிரி திருக்குமரன் அடித்ததாகவும், 2வது எதிரி பாலமுருகனும் பூட்ஸ் காலால் மிதித்ததாகவும், சொன்னார் அதனால் தான் ஜெயவேல் இறந்துவிட்டான் என்று காவலர் பாரதிதாசன் சொன்னார், என்னை மதுரை ரயில்வே டிஎஸ்பி விசாரித்தபோது நான் நடந்த உண்மையை சொல்லவில்லை. சிபிசிஐடி போலீசார் விசாரணையின் போது தான் நான் நடந்த உண்மைகளை சொன்னேன். ஜெயவேல் விழுப்புரம் ரயில் வே பிளாட்பார்மில் புத்தகங்களை விற்பார், அதனால் எனக்கு தெரியும், என்னிடம் காட்டப்படும் புகைப்படம் அசா.ஆ.2 இருப்பவர் ஜெயவேல் தான். இது சம்மந்தமாக வேலுர் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் விஜயன் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

<u>மனுவின் பேரில் குறுக்கு விசாரணை</u> ஒத்திவைக்கப்படுகிறது.